# கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023: நவ.30 முதல் தமிழக அணிக்கான தேர்வுகள்




**சென்னை:** கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளுக்கான தமிழக அணியில் இடம் பெறுவதற்கான தேர்வு வரும் நவ.30-ம் தேதி முதல் சென்னையில் நடைபெறவுள்ளது. இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் உடற்தகுதியை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் சார்பில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் 2023-ம் ஆண்டுக்கான கேலோ போட்டியை தமிழகத்தில் நடத்துவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்தில் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 2024 ஜன.19 முதல் ஜன.31 வரை நடைபெறும் கேலோ போட்டிகளில் 5 ஆயிரத்தும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கவுள்ளனர். இதையொட்டி போட்டிகளில் தமிழக அணிகள் சார்பில் இடம்பெறுவதற்கான தேர்வுகள் சென்னையில் நவ. 30, டிச.1, 2 ஆகிய தேதிகளில் நடத்தப்படுகிறது. ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், பெண்களுக்கான கூடைப்பந்து அணிக்கு டிச.1-ம் தேதியும், ஆண்கள் அணிக்கு டிச.2-ம் தேதியும், பெண்கள் கால்பந்து அணிக்கு நவ.30-ம் தேதியும், ஆண்கள் அணிக்கு டிச.1-ம் தேதியும் காலை 7 மணி அளவில் வீரர்கள் தேர்வு நடத்தப்படுகின்றன.

அதேபோல நேரு பூங்கா, மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பெண்களுக்கான கபடி மற்றும் கோ-கோ அணிக்கு நவ.30-ம் தேதியும், ஆண்கள் அணிக்கு டிச.1-ம் தேதியும், மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி அரங்கில் பெண்களுக்கான வாலிபால் மற்றும் ஹாக்கி அணிக்கு நவ.30-ம் தேதியும், ஆண்கள் அணிக்கு டிச.1-ம் தேதியும் காலை 7 மணிக்கு வீரர்கள் தேர்வு நடத்தப்படுகின்றன. இதில் தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் தகுந்த பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

## சென்னையில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



**சென்னை:** சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் ரூ.52 லட்சம் செலவில் வி.பி.சிங்குக்கு நிறுவப்பட்ட சிலையை இன்று (நவ.27) காலை 11.00 மணியளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

சிலை திறப்பு விழாவில் வி.பி.சிங்கின் மனைவி சீதாகுமாரி, மகன்கள் அஜயா சிங், அபய் சிங் மற்றும் அமைச்சர்கள், எம்.பி.க்கள்,எம்எல்ஏக்கள் பங்கேற்றனர். உ.பி. முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக இன்று காலை தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் எழுதிய கடிதத்தில், "திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையான சமூகநீதியை, இந்தியாவின் தவிர்க்க முடியாத அரசியல் கொள்கையாக மாற்றிக் காட்டியவர் வி.பி.சிங். அவருடைய இந்தச் சிறப்பான முடிவின் பின்னணியில் ஊக்கசக்தியாக விளங்கியவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள். சமூகநீதிக் காவலர்

எனப் பெயர் பெற்ற வி.பி.சிங் ஆட்சியை, சமூக அநீதியை காலம் காலமாக ஆதரித்தும் - நிலைநாட்டியும் வரும் பா.ஜ.க. கவிழ்த்தது. ஓராண்டு கூட முழுமையாகப் பதவியில் இல்லாவிட்டாலும் இந்தியாவின் மிகச் சிறந்த பிரதமர்களின் வரிசையிலே நிலையான இடத்தைப் பிடித்திருப்பவர் வி.பி.சிங்.

அத்தகைய மாமனிதருக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. அன்று இளைஞரணிச் செயலாளரகவும் இன்று கழகத் தலைவராகவும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் உள்ள உங்களில் ஒருவனான நான் அதனைத் திறந்து வைக்கின்ற நல்வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

இளைஞரணி மாநாட்டுக்கு வாழ்த்து: தொடர்ந்து அக்கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் திமுக இளைஞரணி மாநாட்டுக்கு தனது வாழ்த்தினைப் பதிவு செய்துள்ளார். அதில். "ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன் சமூகநீதிக்காகவும், மாநில உரிமைக்காகவும் தேசிய முன்னணி தொடங்கப்பட்டபோது, கழகத்தின் இளைஞரணி எத்தகைய எழுச்சிமிக்க பேரணியை நடத்திக் காட்டியதோ, அதுபோல, சமூகநீதியை முற்றிலுமாக அழிக்கத் துடிக்கும் நீட் தேர்வுக்கு எதிராகவும், மாநில உரிமைகளைப் பறித்திடும் ஒன்றிய பா.ஜ.க அரசிடமிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காகவும் மக்களின் ஆதரவை நாடிக் கையெழுத்து இயக்கத்தையும், இரு சக்கர வாகனப் பரப்புரைப் பேரணியையும் மிகச் சிறப்பாக நடத்தியுள்ளது இன்றைய இளைஞரணி.

முத்தாய்ப்பாக, டிசம்பர் 17-ஆம் நாள் சேலத்தில் ‘மாநில உரிமை மீட்பு முழக்க’த்துடன் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெறவிருக்கிறது. இளைஞரணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான தம்பி உதயநிதி இன்று தன் பிறந்தநாளில் என்னிடம் வாழ்த்துகளைப் பெற்றுள்ளார். அவரை மட்டும் நான் வாழ்த்தவில்லை. இரண்டாவது மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட வேண்டும் என அயராது பாடுபடும் இருபத்தைந்து இலட்சம் இளைஞரணி உடன்பிறப்புகளையும் நான் வாழ்த்தி மகிழ்கிறேன்.

மாநாட்டை இளைஞரணி நடத்தினாலும் கழகத்தின் ஒவ்வொரு உடன்பிறப்புக்கும் இதில் பங்கேற்கும் உரிமையுண்டு. இந்த மாநாடு, இன்னும் சில மாதங்களில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பயிற்சிக் களம். கழகத்தினர் கூடுகின்ற பாசறைக் கூடம். அதனால்தான் நேற்று (நவம்பர் 26) நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தின் மையப் பொருளாக இளைஞரணி மாநாட்டிற்கான ஆயத்தப்பணிகள் குறித்தும், அதனை வெற்றிகரமாக நடத்தி முடிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

2007-ஆம் ஆண்டு உங்களில் ஒருவனான என் தலைமையில் இளைஞரணி செயல்பட்டபோது, அதன் வெள்ளி விழா ஆண்டையொட்டி முதல் மாநில மாநாடு நடைபெற்றது. இப்போது தம்பி உதயநிதி அமைச்சராக இருப்பதுபோல அப்போது நான் அமைச்சர். இப்போது நான் முதலமைச்சராக இருப்பதுபோல அப்போது தலைவர் கலைஞர் முதலமைச்சர். இளைஞரணி மாநாட்டுப் பணிகளை நான் முன்னின்று அப்போது மேற்கொண்ட போது, அதன் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்து, நெறிப்படுத்தி வழிநடத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதே பொறுப்புணர்வுடன்தான் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் என் ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன்.

கழகத்தின் சார்பில் நடத்தப்படுகின்ற ஒவ்வொரு மாநாடும் வெற்றிக்கான விரைவுச்சாலை. அதில் கொள்கைப் பட்டாளம் வீறுநடைபோடும். மாநாடு தொடங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே உடன்பிறப்புகளிடம் எழுச்சி உருவாகிவிடும். மாநாடு முடிந்து ஆறு மாதங்கள் கடந்தாலும் உத்வேகம் குறையாத களப்பணி தொடரும். எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும் நம் கொள்கையுணர்வு ஒரு போதும் குறைவதில்லை.

‘அனைவருக்கும் அனைத்தும்’ என்கிற திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம். கலைஞர் உரிமைத் திட்டம், விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பெண்களின் நலன் காக்கும் திட்டங்கள் நேரடிப் பயன்களைத் தருவதால் தமிழ்நாட்டு பெண்களின் நம்பிக்கைகுரிய இயக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே இருக்கிறது. அதுபோல இளைஞர்களுக்கான நான் முதல்வன் திட்டம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, புதிய

வேலைவாய்ப்புகள், மாவட்டந்தோறும் வேலை வாய்ப்பு முகாம்கள், விளையாட்டுப் பயிற்சிகளுக்கான ஊக்கம் இவற்றை திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வருகிறது.

பொய்களை விற்று அதில் கூலி பெற்று இளைஞர்களை ஏமாற்றும் கூட்டம் ஒரு புறம், வதந்திகளை பரப்பி - வன்முறையை விதைத்து தமிழ்நாட்டில் கால் ஊன்றி விடலாம் எனத் தப்புக் கணக்கு போடும் கூட்டம் மறுபுறம், தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டு தமிழ்நாட்டின் உரிமைகளை அடமானம் வைத்து விட்டுப் போன முதுகெலும்பற்ற கூட்டம் இன்னொரு புறம். இந்த மோசடி அரசியல் சக்திகளை எதிர்கொண்டு, மக்கள் நலன் காக்கும் திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வரும் தி.மு.கழகமும் அதன் தோழமை சக்திகளும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு - புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளையும் முழுமையாக வென்றாக வேண்டும். அப்போதுதான் இந்திய அளவில் நம் இந்தியா கூட்டணி வலுவான ஆட்சியை அமைக்கும். இளைஞரணி முன்னெடுத்துள்ள நீட் விலக்கு என்ற இலக்கினை வெற்றிகரமாக எட்ட முடியும். மாநில உரிமைகளை மீட்டெடுக்க முடியும்.

இவற்றை மனதில்கொண்டு, இளைஞரணி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திட மாவட்டக் கழகச் செயலாளர்கள் செயலாற்ற வேண்டும் என்பதை நேற்றைய கூட்டத்தில் எடுத்துரைத்தேன். தேர்தல்களத்திற்கான பயிற்சிக்களமாக அமையவிருக்கும் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாட்டின் வெற்றி அதனைப் பறைசாற்ற வேண்டும். நெல்லையில் நடந்த இளைஞரணியின் முதலாவது மாநில மாநாட்டின்போது, புதிய ஆத்திசூடியை வழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். அதில், கழகம் வில்லாம் நின் அணியே கணையாம் என்று எழுதியிருந்தார். களத்தில் பாய்வதற்குத் தயாராக இருக்கும் கணைகளாக இளைஞரணியினர் செயலாற்றி வருகிறார்கள். அவர்களுக்குத் துணை நிற்கவும், இந்தியா திரும்பிப் பார்க்கும் வகையில் மகத்தான வெற்றி மாநாடாக அமையவும் மாநாட்டுத் தலைவர் தம்பி உதயநிதி அழைக்கிறார்.

கழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், அந்தந்த மாவட்டங்களுக்குட்பட்ட அனைத்துக் கிளைகளிலிருந்தும் தேர்தல் களத்திற்கான வீரர்களாக

உடன்பிறப்புகள் திரளட்டும். கடல் இல்லாச் சேலம், கருப்பு - சிவப்புக் கடலினைக் காணட்டும்.". என்று குறிப்பிட்டுள்ளார்.

## யாத்ரி சேவை அனுபந்த் திட்டத்தின்கீழ் வந்தே பாரத் ரயில்களில் உலகத்தரத்தில் வசதி: ரயில்வே முடிவு



**சென்னை**: தெற்கு ரயில்வேயில் இயக்கப்படும் வந்தே பாரத் ரயில்களில் பயணிகளின் பயண அனுபவத்தை மேம்படுத்த தெற்கு ரயில்வே திட்டமிட்டுள்ளது. அதன்படி, யாத்ரிசேவை அனுபந்த் என்ற முன்னோடி திட்டத்தை அறிமுகப்படுத்தி, ரயில் பயணத்தின்போது பயணிகளுக்கு உணவு உள்பட பல்வேறு சேவைகளை உலகத் தரத்தில் வழங்க முயற்சி எடுத்துள்ளது.

ரயில் பயணிகளின் சேவைகளை மேம்படுத்த இந்திய ரயில்வே புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன்மூலம், வந்தே பாரத் ரயில்களில் பயணிகளின் பயண அனுபவம் மேலும் உயர உள்ளது.

அதாவது, ரயில் பயணத்தின்போது, சேவைகளில் ஒரு தரமான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக, தெற்கு ரயில்வேயில் 6 ஜோடி வந்தே பாரத் விரைவு ரயில்களில் யாத்ரி சேவை அனுபந்த் என்ற திட்டத்தை தொடங்குவதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. இது ஒரு முன்னோடி திட்டமாகும். ரயில் பயணிகளின் பயண அனுபவத்தை மேம்படுத்துவது, சிறந்த சேவை வழங்குவது இதன் முக்கிய நோக்கமாகும்.

**உணவு, தூய்மைப்பணி:** ரயில்வேயின் தூய்மைக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் உணவு,தூய்மைப்பணி போன்றவற்றில் ஒரு சேவை வழங்குநர் நியமிக்கப்படுவார். சேவையின் தரத்தை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு ரயிலிலும் உணவு மற்றும் குளிர்பான சேவைகளுக்காக பிரத்யேகமாக ஒருவர் பணியமர்த்தப்பட்டிருப்பார். யாத்ரி சேவை அனுபந்த் திட்ட மேலாளர், விருந்தோம்பல் துறையில் மூன்றாண்டு பணி அனுபவம் பெற்ற பட்டதாரியாக இருப்பார்.

**முன்னோடித் திட்டம்:** தெற்கு ரயில்வேயில் சென்னை சென்ட்ரல்-மைசூர், சென்னை எழும்பூர் -திருநெல்வேலி, சென்னை சென்ட்ரல் -கோவை, திருவனந்தபுரம்-காசர்கோடு மற்றும் சென்னை சென்ட்ரல் -விஜயவாடா ஆகிய வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் இது ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது.

## இந்தியாவில் விற்பனையாகும் செல்போன்களில் 99.2 சதவீதம் உள்நாட்டில் தயாரானவை: மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தகவல்



**புதுடெல்லி**: இந்தியாவில் விற்பனையாகும் செல்போன்களில் 99.2% உள்நாட்டில் தயாரானவை என மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2014-ம் ஆண்டு மத்தியில் பாஜக ஆட்சி அமைந்த பிறகு உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க 'மேக் இன் இந்தியா' திட்டத்தை அறிமுகம் செய்தது.இதையடுத்து, வெளிநாட்டு நிறுவனங்கள் செல்போன் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளை இந்தியாவில் நிறுவின.

இந்நிலையில், செல்போன் உற்பத்தி குறித்த ஆய்வு கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இத்துறை சார்ந்த முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள் பங்கேற்றனர்.

செல்போன் உற்பத்தித் துறையின் சாதனைகளை அங்கீகரிப்பதற்கும், இத்துறையில் வளர்ந்து வரும் சவால்களைப் பற்றி விவாதிப்பதற்கும், நிலையான வளர்ச்சிக்கான உத்திகளை ஆராய்வதற்கும் இந்த கூட்டம் ஒரு தளமாக அமைந்தது.

எதிர்கால வாய்ப்புகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் வெற்றியை தக்கவைத்துக் கொள்வதற்கும் விரிவுபடுத்துவதற்கும் தேவையான கூட்டு முயற்சிகள் குறித்து ஆக்கபூர்வமாக விவாதிப்பதற்கு இந்தக் கூட்டம் உதவியாக இருந்தது.

இந்தியாவில் தயாரிப்போம் (மேக் இன் இந்தியா) திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் செல்போன் உற்பத்தித் துறை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் திருப்தி தெரிவித்தார்.

இந்நிலையில், அமைச்சர் தனது ட்விட்டர் பக்கத்தில், "செல்போன் உற்பத்தி துறையின் முன்னேற்றம் குறித்து ஆராய,துறை சார்ந்தவர்களை சந்தித்து கலந்துரையாடினேன். கடந்த 9 ஆண்டுகளில் இத்துறை 20 மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த 2014-ல் 78% செல்போன்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இந்த ஆண்டில் இந்தியாவில் விற்பனையான செல்போன்களில் 99.2% உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை" என பதிவிட்டுள்ளார்.

செல்போன் துறையின் வளர்ச்சி உள்நாட்டு உற்பத்தி சூழலை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இறக்குமதியைசார்ந்திருப்பதைக் குறைக்கவும் கணிசமாக பங்களித்துள்ளது. முன்னதாக, கூகுள் நிறுவனம் இந்தியாவில் செல்போன் உற்பத்தியை தொடங்கப் போவதாக அறிவித்திருந்தது. இதன்படி, சாம்சங், ஆப்பிள் நிறுவனங்களைப் பின்பற்றி கூகுள் நிறுவனமும் செல்போன்களை இந்தியாவில் தயாரிக்கத் தொடங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## உச்ச நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கருக்கு சிலை



**புதுடெல்லி**: அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு, நேற்று டெல்லியில் உச்ச நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலையை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு திறந்து வைத்தார்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டிஓய் சந்திரசூட், மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அம்பேத்கர் சிலைக்கு மரியாதை செலுத்தினர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1949-ம் ஆண்டு நவம்பர் 26-ம் தேதி அங்கீகரிக்கப்பட்டது. இதை நினைவுகூரும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26-ம்தேதி சட்ட தினமாக கொண்டாடப்படுகிறது. 2015-ம் ஆண்டுமுதல் அது அரசியலமைப்புத் தினமாக கொண்டாடப்படுகிறது.

அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு நேற்று உச்ச நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை திறக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் திரவுபதிமுர்மு இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில், "அரசியலமைப்பில் நீதித் துறைக்கான இடம்தனித்துவமானது. நாட்டின் அனைத்து சமூக மக்களிடமிருந்தும் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள அம்பேத்கர் சிலை 7அடி உயரம் கொண்டது. வழக்கறிஞர் உடை அணிந்தவாறு, அம்பேத்கர் தன்னுடைய கையில்

அரசியலமைப்பு சட்ட புத்தகத்தைபிடித்திருக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சிலையை சிற்பி நரேஷ் குமாவத்வடிவமைத்துள்ளார். உச்ச நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்படும் முதல் அம்பேத்கர் சிலை இதுவாகும்.

EVA STALIN IAS ACADEMY